SJSW 2024 4(1) : 102-113

Student Journal of Social Work (SJSW)
Volume 04– Issue 01

DOI: https://doi.org/10.4038/sjsw.v4i1.27

# CHALLENGES FACED BY SOCIAL WORK STUDENTS IN THE INITIAL FIELDWORK: A CASE STUDY OF FIRST-YEAR STUDENTS AT THE NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT

Hassan, N. M.[1]
[1] School of Social Work, National Institute of Social Development, Liyanagemulla, Seeduwa, Sri Lanka

## ABSTRACT

Social work is considered a professional qualification in Sri Lanka and is offered by the National Institute of Social Development as a Bachelor of Social Work (BSW) course. This program integrates classroom learning with a field practicum, requiring students to complete three stages of fieldwork during their first, second, and fourth years. First-year students encounter various challenges during their initial fieldwork, including a lack of prior experience, language proficiency, and technical knowledge. Additional difficulties include issues with registration, being compelled to work in unrelated industries like cleaning, marriage proposals, insufficient allowances, high transportation costs, and feelings of insecurity. Therefore, this study aims to identify the challenges faced by first-year BSW students during their initial fieldwork. The study employed both primary and secondary data collection methods. Primary data were gathered through questionnaires, interviews, direct observation, and case studies. Interviews were conducted with 50 students and 10 key informants, including lecturers, NGO officers, hospital medical superintendents, child welfare officers, and government officials. Secondary data sources included students' field reports, organizational reports, and field test results, which were analyzed both numerically and conceptually. Findings indicate that first-year social work students encounter significant challenges due to inadequate facilities for conducting field tests in their selected departments, a knowledge gap among departmental officials, limited supervision and awareness programs for trainees, racial discrimination in government departments, and a lack of community understanding regarding the trainees' roles. To mitigate these challenges, pairing two or more students for fieldwork, rather than assigning individuals alone, proved to be beneficial. Implementing this practice could alleviate the difficulties faced by first-year social work students during their initial field experiences and enhance the overall learning process.

**KEYWORDS:** Fieldwork, Social Work, Case Study, Professionalism

## 1. அறிமுகம்

களப்பரீச்யமானது சமூகப்பணியின் ஒரு பகுதியாகவும், சமூகப்பணியில் ஒருங்கிணைந்த அங்கமாகவும் காணப்படுகிறது.இது செயல்முறை மூலம் கற்றல் எனும் சமூகப்பணியின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. ‘‘களப்பரீட்சய காலமானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இன்றியமையாத காலமாகும். இது மாணவர்களின் கற்றல் திறன்களை பயிற்சி செய்தல், சமூக சூழல்களை ஆராய்தல், வளங்களை அடையாளம் காணுதல், தொழில் கல்வி மற்றும் எப்படிப்பட்ட பிரச்சினைகளை எவ்வாறு சமாளிக்கலாம் என்கின்ற அறிவு, தரமான அணுகுமுறைகள் என்பவற்றை புரிந்து கொள்ளவும், விவரிக்கவும்,விளக்கவும் களப்பரீட்சயமானது முக்கியமான செயல்பாடாக காணப்படுகிறது.’’(Rahayuningsih, 2016).களப்பரீட்சயமானது சமூகப் பணியின் நோக்கம்,மூலதர்மங்கள், கொள்கைகள், மதிப்புகள், நெறிமுறைகள், விழுமியங்கள் மற்றும் வகுப்பறை சூழலில் கற்ற பாடங்களின் உள்ளடக்கங்கள் என்பவற்றை பயன்படுத்தும் ஒரு தளமாகவும் காணப்படுகிறது. இது உலகில் முன்னணி சமூகப் பணி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றினால்கற்பிக்கப்படுகிறது.“BSWகளப்பரீட்சயமானது சமூகப்பணி பயிற்சியின் ஆரம்ப கட்ட கற்பித்தல் செயற்பாடாகும். இதற்கு அனுபவம் அவசியம் இல்லை. மாணவர்களின் தொழில் முறைதத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு எவ்வளவு காலம் தேவை என்பதை அவதானிப்பதற்காகவும், மாணவர்களின் வேலை செய்யும் திறனை விரிவாக்குவதற்காகவும், சிரமங்களை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளம் காண்பதற்கும், அவற்றை தீர்ப்பதற்குமான பரிசோதனையாகவே களப்பரீட்சயம் காணப்படுகிறது’’ (Petra, Tripepi & Guardiola, 2020).இலங்கையில் சமூகப்பணியானது ஒரு தொழில்வாண்மையான பரீட்சயமாக காணப்படுவதுடன் அதனை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது இளமானி சமூகப்பணி கற்கை நெறியாகவும் வழங்கி வருகிறது. இக்கற்கையானது வகுப்பறைக்கற்றலுடன் இணைந்த களப்பரீட்சயத்தினைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. இதில் முதலாம் இரண்டாம் மற்றும் நான்காம் வருடம் என மூன்று கட்ட களப்பரீட்சயத்தை சமூகப்பணி மாணவர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## 2. ஆய்வுப்பிரச்சினை

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த சமூகப்பணித்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தேரிவுப்போட்டிப் பரீட்சை மூலம் சமூகப்பணி கற்கைக்குள் உள்வாங்குகிறது. இளமாணி சமூகப்பணி மாணவர்கள் சமூகப்பணி கற்கையின் ஒருபகுதியான களப்பரீட்சயத்தினை மேற்கொள்வதில் களப்பரீட்சய முன்னனுபவமின்மை, மொழித்தேர்ச்சியின்மை, தொழில்நுட்ப அறிவின்மை, கணக்கெடுக்கப்படாமை,துப்பரவு தொழிலில் ஈடுபடவைத்தல், திருமண நிச்சயதார்த்தம், கொடுப்பனவின்மை, அதிக போக்குவரத்து செலவீனம், பாதுகாப்பின்மை போன்ற சவால்களை சந்தித்து வருகின்றனர்.‘‘சமூகப்பணி மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது குறிப்பிட்ட மக்கள் தொகையுடன் பிரச்சினைக்குரிய பிரதேசத்தில் தலையீடுகளை மேற்கொண்டு இடையீட்டு திட்டம் மற்றும் அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேலும் BSWமாணவர்கள் 400 மணி நேர பயிற்சி நேரம் தேர்ச்சி பெற்ற மேற்பார்வையாளரின் கீழ் பணிபுரிய வேண்டியுள்ளது. இவற்றில் பயிற்சி பெறும் பிரதேசத்தில் அடக்குமுறைகள், பாகுபாடு, கட்டமைப்பு ஆகியவற்றின் விளைவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும். மேலும் சமூக சமத்துவமின்மை, சேவை நாடியின் வாழ்க்கையில் அதிர்ச்சியான வரலாறு போன்றவற்றை சமூகப்பணி மாணவர்கள்

தாங்கிக் கொள்ள வேண்டியதாக உள்ளது”((Petra, Tripepi & Guardiola, 2020). “களப்பயிற்சி என்பது விழிப்புணர்வு, அறிவு மற்றும் உண்மைத்தன்மையின் அளவை வெளிப்படுத்தும் ஒரு தளமாக கருதலாம், மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கும் போது பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகள் தொடர்பான நடைமுறை பற்றி பல ஆய்வுகள் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்வதை கண்டறிந்து, பயிற்சி படிப்புக்கள் களத்தில் விசாரித்து செயல்படுதல், பயிற்சியின்போது மேற்பார்வைகள் மற்றும் தடைகள், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கஸ்டங்கள் என்பவற்றை நடைமுறையில் பயிற்சி எடுப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது”( Rahayuningsih, 2016).“மாணவர்கள் களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் போது பாலினம் சார்பாகவும் நடைமுறை படிப்புகளில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும், பிரதேசத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாகவும், கல்வி மேற்பார்வையாளர் தொடர்பான பிரச்சினைகள் காரணமாகவும், வகுப்பறை கற்றலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவும், களப்பரீட்சயத்தில் குறைந்தளவு பங்களிப்பினை வெளிக்காட்டுகின்றனர;”( Itmeizeh & Jaradat ,2020)மேலும் இளமாணி சமூகப்பணி மாணவர்கள் தங்களதுகளப்பரீட்சயத்தின் போது குடும்பப்பிரிவு, பொருளாதார செலவு, பொறுத்தமற்ற விடுதி,பல் கலாசார மக்களின் பழக்கவழக்கங்கள், பாலியல் ரீதியான தொந்தரவு, போக்குவரத்து இடைஞ்சலகள், உளநெருக்கீடு, தனிமை உணர்வு போன்றவற்றிற்கும் இளமானி மாணவர்கள் ஆளாகுகின்றார்கள். இக்களப்பரீட்சய சவால்களை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளம் காணவேண்டியது தற்காலத்தில் அவசியமாக உள்ளது.

## 3. நோக்கம்

சமூகப்பணி மாணவர்கள் ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தின்போது எதிர்கொள்ளும் சவால்களை இணங்கண்டு பொருத்தமான சமூகப்பணி இடையீட்டினை முன்வைத்தல்.

## 4. குறிக்கோள்

- சமூகப்பணி மாணவர்கள் எதிர்நோக்கும் களப்பரீட்சய சவால்களை அடையாளப்படுத்துதல்.
- சமூகப்பணி மாணவர்களின் களப்பரீட்சய சவால்களுக்கான காரணிகளை கண்டறிதல்
- சமூகப்பணி மாணவர்கள் களப்பரீட்சய சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிவகைகளை விபரித்தல்
- சமூகப்பணி மாணவரின் களப்பரீட்சய சவால்களுக்கான பிரயோக ரீதியான சமூகப்பணி இடையீடுகளை முன்வைத்தல்.

## 5. ஆய்வுவினா

- சமூகப்பணி மாணவர்கள் எவ்வாரான களப்பரீட்சய சவால்களை் எதிர்நோக்குகின்றனர்?
- சமூகப்பணி மாணவர்களின் களப்பரீட்சய சவால்களுக்கான காரணிகள் எவை?
- சமூக பணி மாணவர்கள் களப்பரீட்சய சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிவகைகள் என்ன?
- சமூகப்பணி மாணவரின் களப்பரீட்சய சவால்களுக்கான பிரயோக ரீதியாக முன்வைக்க கூடிய சமூகப்பணி இடையீடுகளை் எவை?

## 6. இலக்கியமீளாய்வு

‘‘பயிற்சி என்பது அறிவு விழிப்புணர்வு மற்றும் உண்மையின் அளவை வெளிப்படுத்தும் தலமாக கருதலாம் இது மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கும் போது பல்வேறு கற்றல் உத்திகள் தொடர்பான ஆசிரியர்களின் நடைமுறைகளை பற்றி ஆய்வு செய்யும் நிலையாகும் மேலும் பயிற்சி செய்யும்போது பிரச்சனைகள் உருவாகுகின்றது. அது மாணவர்களை கஷ்டப்படுத்துகிறது. மாணவர்கள் களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் போது பாலினம் சார்பாகவும் நடைமுறை படிப்புகளில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் கள பிரதேசத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாகவும் கல்வி மேற்பார்வையாளர் தொடர்பான பிரச்சினைகள் காரணமாகவும் வகுப்பறை கற்றலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவும் களப்பரீட்சயத்தில் குறைந்த அளவு பங்களிப்பினை மேற்கொள்கின்றனர்’’( Itmeizeh & Jaradat, 2020).“சமூகப் பணி களப்பரிசியத்தில் முன்அனுபவம், வகுப்பறை கற்றல், கள நடைமுறையின் முக்கியத்துவம், நிபுணர்களின் பற்றாக்குறை, தொழில்முறை கல்வி நிறுவனங்களின் குறை, களப்பரீட்சயத்தில் எழும் அழுத்தங்களை தாங்கிக் கொள்ளுதல். நன்கு பயிற்சி பெற்ற நிபுணர்களின் கீழ் பணியாற்றுவதில் உள்ள சிரமம், என்பன களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களாக காணப்படுகிறது. மேலும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் ஊடகங்களின் செயற்பாடு வளர்ச்சி அடைந்து வரும் உலகளாவிய தொழில் போட்டி அதிகரித்த அரசியல் ஸ்திரத்தன்மையின்மை விரிவடையும் பயங்கரவாத அச்சுறுத்தல் மற்றும் மாறுபாடுகள் புதிய பொருளாதாரம், கடந்த காலத்தை பற்றிய அறிவின்மை, நிறுவன நிர்வாகிகளின் தற்போதைய நடைமுறைகள் அதற்கான அவர்கள் அடிக்கடி மேற்கொள்ளும் சோதனை மற்றும் பிழைகளை சீர்திருத்தப்படாமல் செயல்படுதல் என்பன களப்பரீட்சயத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களாக காணப்படுகிறது”(Ralph,Walker & Wimmer,2009).“கடந்த காலங்களில் கற்பித்தல் செயல்முறை மாத்திரம் காணப்பட்டது. ஆனால் தற்கால கல்வி செயல்முறை, சமூகமயமாக்கல் செயல்முறை, நாடுகளுக்கு இடையேயான நாகரீக வளர்ச்சி, போன்றவற்றினால் கற்பித்தல் செயல்முறைகளைத் தாண்டி செயல்முறை பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டியது காலத்தின் தேவியாக உள்ளது’’( Itmeizeh & Jaradat, 2020).‘‘BSWகற்கைநெறியில் களப்பரைச்சியமானது வாரத்திற்கு 24 மணி நேரத்துக்கு குறையாததாக அமைய வேண்டும் அவ்வாறு இருந்தால் மாணவர்கள் போதுமான நேரத்தை களத்தில் செலவிடுவதும் புரிந்து கொள்வதும் இலகுவாக அமையும்.அதிக கற்றலும் மேற்கொள்ளப்படும். மேலும் மேற்பார்வையாளர்களின் கருத்துக்களையும் செவிமடுக்கக்கூடியதாக இருக்கும். களப்பரீட்சயமானது மாணவர்களின் கற்றல் ஒப்பந்தம் மதிப்பெண்கள், போதுமான அறிவு திறன் வேலை பயிற்சி, சமூகத்துடன் ஒத்திசைந்து பணியாற்றுதல், சமூக நடத்தை மற்றும் அளவீட்டு முறைகளை புரிந்து கொள்ளும் ஒரு பயிற்சியாக காணப்படுகிறது’’(Petra,Tripepi& Guardiola,2020).‘‘மாணவர்கள் வகுப்பறை கற்றலில் தேர்ச்சி பெறுவதற்கு குறைந்தபட்சம் 39 புள்ளிகள் பெற்றுக் கொள்ள வேண்டும் ஆனால் வகுப்பறை கற்றல் மூலமாக பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை விட களப்பரீட்சயத்தில் கற்கும்போது மாணவர்கள் அதிகம் புரிந்து கொள்கிறார்கள் இதன் மூலம் அவர்கள் அதிக புள்ளிகளை பெறக்கூடியதாக காணப்படும்.வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மூலமாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உள்ளான உறவுமுறைகள் மட்டுமே கட்டி எழுப்பப்படுகின்றன. ஆனால் களத்தில் பணி புரியும் போது மக்களுக்கும்


நிறுவனங்களுக்கும் இடையிலான மாணவர்களினுடைய தொடர்பு அதிகரிக்கிறது. இதன் மூலம் எதிர்கால பயிற்சியின் போது மாணவர்கள் இலகுவான தொழில் பயிற்சியினை மேற்கொள்ள முடியும். மேலும் வகுப்பறையில் கற்ற ஒழுக்கம், செயற்பாடுகள் என்பன மாணவர்களின் படைப்பாற்றலை மேலும் அதிகரிக்கச் செய்யும் மேலும் வேறுபட்ட மொழி கலாச்சாரங்களை கற்பதற்கும் ஊக்கப்படுதவும் களப்பரீட்சயம் உதவியாக இருக்கும்"( Sarocoban,2010).“BSWபொது சமூகப் பணியாளர்களை உருவாக்குவதற்கு கோட்பாட்டு ரீதியாக ஓரங்கிணைந்த பாடத்திட்டமாக காணப்படுகிறது. தற்போதைய நடைமுறை கோட்பாடு மற்றும் கள நடைமுறை வாய்ப்புகள் களப்பயிற்சி அனுபவத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது மாணவர்கள் கோட்பாடு ரீதியான பயிற்சியை ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இது வாய்ப்பை வழங்குகின்றது. சமூகப் பணி தொழிலில் முக்கிய பணி அறிவைப் பெறுவது மற்றும் நடைமுறை கொள்கைகள் மற்றும் நடத்தைகளை புரிந்து கொள்வது, பயிற்சி அறிமுகம் சமூகப்பணி கல்வியில் ஒருங்கிணைந்த செயற்பாடு ஆகியவற்றை இலங்கலை நிலை சமூகப் பணி செய்யும் கலப்பயிற்சி மாணவர்கள் அறிந்து கொள்வதற்கும் களப்பயிற்சி உதவுகிறது மேலும் நேரத்தையும் சக்தியையும் செலவிடும் முறையும் வினைத்திறனான அனுபவத்தை பெறுவதற்கும் இது உதவி புரிகிறது"( Csiernik & Karley,2004).

## 7. முறையியல்

ஆய்வின் தரவு திரட்டலானது இணைந்த முறைமூலம் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தகவல்கள் பெறப்பட்டது. முதலாம் நிலைத் தகவல்கலாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம், விடய ஆய்வு ஆகியவற்றின் மூலம் 50 மாணவர்களிடமும் விரிவுரையாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன உத்தியோகத்தர், வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர். அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர் உட்பட 10 பிரதான தகவல் வழங்குனர் நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலை தகவல்கலான மாணவர்களின் கள அறிக்கை, கள நிறுவனங்களின் அறிக்கை, களப்பரீட்சய பெறுபேற்று அறிக்கை, போன்றவற்றின் மூலமும் பெறப்பட்ட தகவல்கள் எண்ணியல் மற்றும் கருத்தியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

## 8. பகுப்பாய்வு

### 1) களப்பணி பாடத்திட்டம்




**வரைபு : 08.1**

**தரவு மூலம் :- கள தரவு 2024**

சமூகப்பணி கலப்பரீட்சய பாடத்திட்டமானது ஏனைய பாடத்திட்டத்திலிருந்தும் பார்க்கையில் செயல்முறை கற்றலாக காணப்படுவதனால் அதனை வகுப்பறை கற்றலில் விளங்கிக் கொள்வது சிரமமாக காணப்படுவதுடன் கலப்பரீட்சயத்திற்கு சென்று அதனை விளங்கிக் கொள்வதிலும் மாணவர்கள் சிக்கல்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். ஆய்வுப்பிரதேசத்தின்

இளமானி சமூகப்பணி கற்கையின் பாடத்திட்டமானது முதலாம் இரண்டாம் மற்றும் நான்காம் வருடங்களில் களப்பரீட்சயத்தை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதில் 13 வீத முதலாம் வருடமாணவர்கள் களப்பரீட்சயத்தில் களப்பணி பாடத்திட்டம் தொடர்பான சவால்களை முகம் கொடுக்கக் கூடியதாக உள்ளனர் மேலும் 87 வீத மாணவர்கள் களப்பணி பாடத்திட்ம் தொடர்பான தெளிவினைக் கொன்டிருப்பதினை ஆய்வின் முடிவுகளில் இருந்து பெறக்கூடிதாக உள்ளது.


### 2) கொடுப்பனவின்மை

இளமானி சமூகப்பணி கற்கை நெறியின் ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தினை மேற்கொள்ளும் 83வீத மாணவர்கள் களநிறுவனத்தின் ஏனைய ஊழியர்களைப் போன்று பணியாற்றிய போதிலும் எந்தவொரு கொடுப்பணமும் கிடைக்காமல் பணியாற்றுவதும் கொடுப்பனவை பெறுகின்ற 13வீத மாணவர்கள் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களிலேயே பணியாற்றுவதுடன், இவர்கள் குறைந்த அளவிலான கொடுப்பனவையே பெற்றுக் கொள்வது ஆய்வின் தகவல்களில் இருந்து வெளிப்படக் கூடியதாக உள்ளது.

### 3) மேற்பார்வை

களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் முதலாம்வருட சமூகப்பணி மாணவர்கள் தங்களது சந்தேகங்களையும் களப்பரீட்சயத்தில் எழும் வினாக்களையும் முறையான விதத்தில் எதிர்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்குவதில் களமேற்பார்வையாளர்கள் தயக்கம் காட்டுதல் மற்றும் தங்களது ஓய்வில்லாத பரபரப்பான வேலையில் மாணவர்களை மேற்பார்வை செய்யாது விடுவதினால் 56வீத மாணவர்கள் தங்களது களப்பரீட்சயத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும் என்பது பற்றிய தெளிவின்மையினால் சவால்களுக்கு உள்ளாவதும்,களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நேரத்தை ஒதுக்கி மாணவர்களுக்கு ஏற்படுகின்ற சவால்களை சரியான முறையில் எதிர்கொள்கின்ற முறையினைவிளங்கப்படுத்தக்கூடிய களமேற்பார்வையாளர்கள் கிடைத்த 44வீத மாணவர்கள் களப்பரீட்சய சவால்களை வெற்றிகரமாக முன்னெடுக்க கூடியவர்களாக காணப்படுவதும் ஆய்வின் முடிவிலிருந்து வெளிப்படுகிறது.

### 4) களப்பரீட்சய முன்னனுபவமின்மை




தரவு மூலம் :- கள தரவு

சமூகப்பணி இளமானி கற்கைநெறியை மேற்கொள்ளுகின்ற மாணவர்கள் களப்பரீட்சய முன்அனுபவம் இன்மை காரணமாக சவால்களை எதிர்நோக்குகின்றனர். இது ஆய்வின் நேர்காணலின் போது பங்கேற்ற 24வீத மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில்“இதற்கு முன்னர் நாங்கள் எந்தவித எந்தவித நிறுவனங்களிலும்

பணியாற்றியது கிடையாது. நிறுவனங்களின் சட்ட திட்டங்களை பின்பற்றி அவர்களுடைய ஒழுக்க கோவைகளை பின்பற்றி நடப்பது என்பது மிகவும் சிரமத்திற்குரியதாக உள்ளது.'' என்பதாக கருத்து தெரிவித்தனர். மேலும் ஆய்வில் விடயற்கற்கையில் பங்கு பற்றிய 13வீதமானவர்கள் கருத்து தெரிவிக்கையில் ''நாங்கள் சமூகப்பணி களப்பயிற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் எந்தவித முறை சார்ந்த நிறுவனங்களிலும் பணியாற்றியது கிடையாது. எனவே எங்களுக்கு குறித்த கள நிறுவணங்களின் நேரசூசிக்கு அமைவாக பணியை மேற்கொள்வது என்பது சிரமமாக உள்ளது.'' என்பதாக குறிப்பிட்டிருந்தனர். மேலும் 63வீதமாணவர்கள் ஆய்வின் நேர்காணலில் கருத்து தெரிவிக்கையில் ''நாங்கள் பாடசாலை கல்வி கற்கும் போது நேரத்திற்கு செல்வதும், பாடசாலை கடமைகளை நிறைவேற்றுவதுமாக பாடசாலை சட்டதிட்டங்களை பின்பற்றி ஒழுங்கு முறையாக நடந்தமையினால் எங்களுக்கு கள நிறுவனமும் கல்வி கற்கும் நிறுவனமாகவே தெரிகிறது.'' என்பதாக கருத்து தெரிவித்தனர் இதிலிருந்து கள நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் ஏற்கனவே தாங்கள் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் சிறந்து விளங்குவதும் களப்பரீட்சயம் பற்றிய முன்அனுபவம் இல்லாத மாணவர்கள் கள நிறுவனங்களின் சட்ட திட்டங்களை பின்பற்றி நடப்பதில் சவால்களுக்குள்ளாவதும் ஆய்வின் முடிவுகளில் இருந்து வெளிப்படுகிறது.

### 5) முறைசாரா பணியில்ஈடுபட வைத்தல்

ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் முதலாம்வருட சமூகப்பணி மாணவர்களில் 33வீத மாணவர்களை குறித்த நிறுவனம் தங்களது நிறுவனத்தின் சுத்தம் செய்யும் ஊழியர்களுடன் சேர்த்து துப்புரவு தொழில்களில் ஈடுபட வைத்திருப்பதும், 26வீத மாணவர்களை முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிய வைத்திருப்பதும், 13வீத மாணவர்களை குறித்த சில நிறுவனங்கள ஊழியர்களின் பதில்கடமைக்காக பணிபுரிய வைத்திருப்பதும் ஆய்வில் முடிவிலிருந்து இருந்து வெளியாகிறது. இது குறித்து நிறுவனத்தில் சமூகப்பணி தொடர்பான அறிவில் மட்டுப்பாடு கானப்படுவதும் சமூகப்பணி பற்றிய தெளிவின்மையுமே காரணமாகும். மேலும் 28வீத மாணவர்கள் களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் நிறுவனங்களில் மாணவர்களுக்கு சிறந்த வரவேற்பு கிடைக்கப்பெற்றதுடன் சமூகப்பணிக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இது அந்நிறுவனத்தில் பணிபுரியும்ஊழியர்கள் ஏற்கனவே குறித்த சமூகப்பணி நிறுவனத்தில் ஏதோவொரு கற்கைநெறியை கற்றவர்களாக அல்லது சமூகப்பணி தொடர்பான அறிவைக்கொண்டு காணப்படுவதுடன்,சமூகப்பணி மாணவர்களுக்கு தேவையான வசதிப்படுத்தல்களையும் கள நிறுவனங்களில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை ஆய்வின் முடிவுகள் இருந்து வெளிப்படுகிறது.

### 6) பதிவுசெய்தல்/ஆவணப்படுத்தல்

சமூகப்பணி பரீட்சயம் என்பது சான்று அடிப்படையிலான ஒரு பரீட்சயமாகும். இது ஆவணப்படுத்தலில் மிக முக்கியமான செயற்பாடாக காணப்படுகிறது. சமூகப்பணி மாணவர்கள் தங்களின் ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தினை மேற்கொள்ளும் போது தாங்கள் மேற்கொள்கின்ற களப்பயிற்சியினை சான்று அடிப்படையில் பதிவு செய்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இது ஆய்வின் நேர்காணலில் பங்கேற்ற 33 வீத மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில் ''தங்களை பயிற்சி மாணவர்கள் என்பதனால் ஆதாரப்பூர்வமான சான்றுகளை தங்களுக்கு வழங்குவதில் நிறுவனம் தயக்கம் காட்டுகிறது.'' எனவும் ஆய்வில் பங்கேற்ற 27 வீத

மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில "தங்களது களப்பயிற்சிக்கு சான்று அடிப்படையிலான தகவல்கள் தேவையில்லை எனக் கூறி நிறுவனங்கள் புறக்கணிக்கிறது.'' எனவும், ஏனைய 40வீத மாணவர்கள் தங்களது சமூகப்பணி பயிற்சி பற்றிய தெளிவினை குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் சான்று அடிப்படையிலான ஆவணப்படுத்தலினை மேற்கொள்வதாகவும் ஆய்வின் நேர்காணலில் கூறினார்கள். இதன் மூலம் சமூகப்பணி பரீட்சயத்தினை மேற்கொள்ளும் ஆரம்பகட்ட சமூகப்பணி இளமாணி மாணவர்கள் தங்களினுடைய சான்று அடிப்படையிலான ஆவணப்படுத்தலின் போது சவால்களை எதிர்கொள்வது ஆய்வின் முடிவுகளில் இருந்து வெளிப்படுகிறது.

### 7) மாணவர்களின் திறன் தொடர்பான சவால்

இளமானி சமூகப்பணி மாணவர்கள் தங்களது ஆரம்பகட்ட களப்பணி பரீட்சயத்தில் தங்களுடைய தனியான திறன்களின் அடிப்படையிலான சவால்களை எதிர்கொண்டு வருவதுடன் சமூகத்துடனான தொடர்பாடல்களை மேற்கொள்வது தொடர்பாகவும் சவால்களுக்குள்ளாகுகின்றனர். இது ஆய்வில் பங்கேற்ற 16.75வீத மாணவர்கள் சமூகத்திலுள்ள பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதிலும், 36.5வீத மாணவர்கள் வளங்களை அடையாளப்படுத்துவதிலும், 13.25வீத மாணவர்கள் வளங்களை இணைப்புச் செய்தல் தொடர்பாகவும், சவால்களை எதிர்கொண்டுள்ளமை ஆய்வின் முடிவுகளில் இருந்து வெளிப்படக்கூடியதாக உள்ளது. இது மாணவர்கள் தங்களது வகுப்பறை கற்றலில் வகிபங்குகளுடன் கூடிய குழுச்செயற்பாட்டில் ஈடுபாடின்மை மற்றும் வகுப்பறை கற்றலில் பலவீனம், மாணவர் மத்தியில் ஒதுங்கி இருத்தல், போன்ற நிலைமைகளினால் இவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளமை ஆய்வின் விடயக்கற்கையில் இருந்து வெளிப்படக் கூடியதாக இருந்தது.மேலும் சவால்களுக்கு முகங்கொடுக்காத 30வீத மாணவர்கள் வகுப்பறை கற்றல்,குழுச்செயற்பாடு மற்றும் திறன் விருத்தி செயற்பாட்டிலும் சிறந்த பங்குபற்றுதலினை மேற்கொண்டதன் விளைவாக களப்பரீட்சயத்தின் போது தங்களது திறன் தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுக்காத வண்ணம் வெற்றிகரமான களப்பரீட்சயத்தினை மேற்கொண்டுள்ளமை ஆய்வின் முடிவுகளில் இருந்து வெளிப்படுகிறது.

### 8) திருமண நிச்சயதார்த்தம்

**அட்டவணை 01 (திருமணநிலை)**

<table>
<tr><td colspan="6">திருமணமானவர்கள் 15%</td></tr>
<tr><td rowspan="4">ஆண்<br>2.5%</td><td>இஸ்லாம்</td><td>-</td><td rowspan="4">பெண்<br>12.5%</td><td>இஸ்லாம்</td><td>85%</td></tr>
<tr><td>இந்து</td><td>100%</td><td>இந்து</td><td>10%</td></tr>
<tr><td>கிறிஸ்த்தவம்</td><td>-</td><td>கிறிஸ்த்தவம்</td><td>05%</td></tr>
<tr><td>பௌத்தம்</td><td>-</td><td>பௌத்தம்</td><td>-</td></tr>
<tr><td colspan="6">திருமணமாகாதவர்கள் 85%</td></tr>
<tr><td rowspan="2">ஆண்<br>32.5%</td><td>இஸ்லாம்</td><td>50%</td><td rowspan="2">பெண்<br>52.5%</td><td>இஸ்லாம்</td><td>45%</td></tr>
<tr><td>இந்து</td><td>45%</td><td>இந்து</td><td>45%</td></tr>
</table>


| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிறிஸ்த்தவம் | 05% | | கிறிஸ்த்தவம் | 10% |
| | பௌத்தம் | - | | பௌத்தம் | - |

**( தரவுமூலம் : களதரவு,2024)**

ஆய்வில் பங்கேற்ற இளமானி மாணவர்களில் 15 வீத மாணவர்கள் திருமணமாகியும் 85% மாணவர்கள் திருமணமாகாத நிலையிலும் தங்களின் சமூகப்பணி இளமானி பாடநெறியினை மேற்கொள்கின்றனர்.திருமணமான 15வீதஇளமானி மாணவர்களில் 80% மாணவர்கள் பெண்களாக காணப்படுவதுடன் அவர்களில் 85வீதமாணவர்கள் இஸ்லாமிய சமயத்தினை பின்பற்றக் கூடியவர்களாகவும் காணப்பட்டனர். இது முஸ்லிம் பெண் மாணவர்களின் மத்தியில் அவர்களது கலாசார, பண்பாட்டு சூழ்நிலை பிரதிபலிப்பதினையும், இந்து மற்றும் கிறிஸ்த்தவ சமயத்தை பின்பற்றும் 15வீத பெண்கள் தங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் திருமனணத்தின் பின்னர் தங்கள் கல்வி நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர். மேலும் திருமணமாகாத 85வீத மாணவர்களில் 45வீதஇஸ்லாமிய பெண் மாணவர்கள் திருமணமாகாத நிலையிலும் தங்களது கல்வியை தொடருகின்றனர். இது முஸ்லிம் பெண்கள் மத்தியில் அவர்களது கல்வியில் ஏற்பட்ட மாற்றம் அவர்களின் திருமண வயதெல்லையிலும் நீடிப்பை ஏற்படுத்தியிருப்பதினையும், இந்து மற்றும் கிறிஸ்த்தவ சமயத்தை பின்பற்றும் 55வீத பெண்கள் திருமண சுதந்திரம் உள்ளவர்களாக இருப்பதினை ஆய்வின் முடிவுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

## 9) களப்பணி நிறுவனம் சார்ந்த சவால்கள்

**வரைபு : 10.1 நிறுவனம் சார்ந்த சவால்கள்**



**a) மொழித்தேர்ச்சியின்மை**

சமூகப்பணி மாணவர்கள் தங்களுடைய தாய் மொழியில் கற்கை நெறியை தொடர்ந்தாலும் ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும்போதுகளநிறுவனத்தில் ஏனைய மொழி பேசக்கூடிய உயர் அதிகாரிகளுடனும் சமூகத்தில் பணியாற்றும் போது மக்களுடைய மொழி வழக்காறுகள் மாணவர்களுக்கு சவாலாக அமைவது ஆய்வின் முடிவிலிருந்து வெளிப்படுகிறது.

**b) போக்குவரத்து**

ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தை மேற்கொள்ளும் சமூகப்பணி மாணவர்கள் கள நிறுவனங்களுக்கு செல்வதும் கள நிறுவனங்களில் இருந்து வீட்டு தரிசனங்களை மேற்கொள்வதற்குமான போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இதில் வீட்டிலிருந்து கள நிறுவனத்திற்கு செல்வதற்கான வாகனவசதி இல்லாத மாணவர்கள் பேருந்தில் செல்லுவதும் நடந்து செல்வதுமாக தங்களது களநிறுவனத்திற்கு சென்ற போதிலும் வீட்டு தரிசனங்களை மேற்கொள்வதற்கு கள நிறுவனங்களின் ஆதரவு கிடைக்காத பட்சத்தில் நீண்ட தூரம் நடந்து செல்லக் கூடியதும் முச்சக்கர வண்டிகளுக்கு அதிக பணம் செலுத்தக்கூடியதுமானசவால்களை சமூகப்பணி மாணவர்கள எதிர்நோக்குவது ஆய்வின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

**c) தொழில்நுட்ப அறிவின்மை**

சமூகப்பணிக் கல்வியானது மக்களோடு பணிபுரியும் கற்கைநெறியாக காணப்படுவதனால் அதற்கான பாரியளவு தொழில் நுட்ப அறிவு பயன்படுத்தப்படுவது குறைவாகும். எனவே கள நிறுவனங்களில் தொழில்நுட்ப ரீதியாக அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களுடன் சமூகப்பணி மாணவர்கள் பணிபுரியும் போது அவர்களின் திறமைக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவு சமூகப்பணி மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியான தேர்ச்சி அடையாமையினால் களநிறுவனத்தில் சமூகப்பணி மாணவர்கள் சவால்களை எதிர் நோக்குவது ஆய்வின் முடிவுகளில் இருந்து கண்டுபிடிக்க கூடியதாக உள்ளது.

**d) கணக்கெடுக்கப்படாமை**

கள நிறுவனங்களில் சமூகப்பணி கல்வி பற்றிய அறிவின்மை, பயிற்சி மாணவர்கள் கௌரவிக்கப்படாமை, அலட்சியம், கள நிறுவன உத்தியோகத்தர்களின் அதிகார கர்வம் போன்ற காரணங்களினால் பயிற்சிக்காக செல்லும் மாணவர்கள் கணக்கெடுக்கப்படாமல் அலட்சியப்படுத்தப்படுவதும், மாணவர்கள் தங்களது களப்பயிற்சியை மேற்கொள்ளும் நிறுவனம் நிறுவனம் சார்ந்த வேலைகளுக்கு மாணவர்களை உள்வாங்கி பின் குறித்த வேலை நிறைவடைந்தவுடன் மாணவர்களை அலட்சியமாக கருதுவதும் அவர்களுடைய திறமையை மதிக்காமல் விடுவதும் ஆய்வின் முடிவுகளில் இருந்து தெரியவருகிறது.

## 9. முடிவுரையும் பரிந்துரையும்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூகப் பணி கல்வியை மேற்கொள்ளுகின்ற சமூகப்பணி மாணவர்கள் தங்களுடைய களப்பரீட்சயத்தினை மேற்கொள்வதில் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொண்டு வருவது ஆய்வின் மூலம் உறுதியாகிறது. ஆகவே இவ் ஆய்வானது இளமானி சமூகப்பணி மாணவர்கள் தங்களது ஆரம்பகட்ட களப்பரீட்சயத்தினை மேற்கொள்ளும் போது எதிர்கொள்கின்ற சவால்களை கண்டறிந்து அவற்றை குறைப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இவ் ஆய்வானது இளமானி சமூகப்பணி மாணவர்களின் களப்பரீட்சய முன்னனுபவமின்மை, மொழித்தேர்ச்சியின்மை, தொழில்நுட்ப அறிவின்மை, கணக்கெடுக்கப்படாமை, துப்பரவு தொழிலில் ஈடுபட வைத்தல், திருமண நிச்சயதார்த்தம், கொடுப்பனவின்மை, அதிக போக்குவரத்து செலவீனம், பாதுகாப்பின்மை போன்ற காரணங்களினால் மாணவர்கள் களப்பரீட்சய சவால்களினை அடைவதினை இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. எனவேதான் இவ்வகையான சவால்களை நிவர்த்தி செய்வதில் கல்வி நிறுவனம் மற்றும் விரிவுரையாளர்கள், பெற்றோர்கள்,களநிறுவனம் முக்கிய இடம் பெறுவதோடு களப்பரீட்சய சவால்களை இல்லாமல் செய்து மாணவர்களின் களப்பயிற்சியை மேம்படுத்துவதில் நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு இந்நாட்டில் சேவையாற்றுவதற்கு சிறந்த ஆளுமை மிக்க சமூகப்பணியாளர்களை வழங்குவது இன்றியமையாததாகும்.

**பரிந்துரைகள்,**

- மாணவர்களுக்கு தொழில் ஆலோசனை வழிகாட்டல்களை உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான வசதியினை பெற்று கொடுத்தல்.
- குறைந்த விலையில் பாதுகாப்பான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- அரச மற்றும் தனியார் தொண்டு நிருவன புலமைப்பரிசில்களை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.
- மாணவர்களின் கல்வி நடவடிக்கை தொடர்பாக பெற்றோரிடம் அல்லது குடும்பத்தாரிடம் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.
- நிறுவன நலன்புரி நிர்வாகத்தினை மாணவர்சங்கங்கள் மத்தியில் செயற்படுத்துதல்.
- தனி ஒரு நபராக களப்பரீட்சயத்திற்கு மாணவர்களை அனுப்பாமல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குழுக்களாக மாணவர்களை ஆரம்பகட்ட களப்பயிற்சிக்காக அனுமதித்தல்
- மாணவர்களுக்கு நேரத்தை செலவிடக் கூடிய மேற்பார்வையாளர்களை மாத்திரம் மேற்பார்வைக்காக நியமித்தல்
- சமூகப் பணி பாடநெறியுடன் தொழில்நுட்ப அறிவையும் மாணவர்களுக்கு கட்டாய கல்வியாக வழங்குவதற்கு சிபாரிசு செய்தல்.

## 10. உசாத்துணை


Csiernik, R. & Karley, M.L. (2004). *Experience of Social Work Practicum Activities in the Field*, New Scholarship in the Human Services, University of Calgary.

Chen, Q. (2015). *The Process of Learning to Do Social Work in The Undergraduate Field Practicum in Mainland China*: BSW Students' Perceptions of Most Useful Learning Event. School of Social Welfare. University at Albany, State University of New York.

Park, S., Lee, J., & Wood, S. M. (2019). *Experiences of International Students in Practicum and Internship Courses*: A Consensus Qualitative Research. The Journal of Counsellor Preparation and Supervision, 9(2). http://dx.doi.org/10.7729/92.1137

Hamaidi, D., Al-Shara, I., Yousef Arouri, Y., & Awwad, F.A. (2014, May). *Student-teacher's Perspectives of Practicum Practices and Challenges*. European Scientific Journal edition vol.10, (13). ISSN: 1857 – 7881 (Print) e - ISSN 1857- 7431.

Ralph, E., Walker, K., & Wimmer, R. (2009, January). *Deficiencies in the Practicum Phase of Field-Based Education*: *Students' Views*. Northwest Journal of Teacher Education. Northwest Passage: Journal of Educational Practices.Vol,7(1).

Al-Momani, F. (2016, June). *Challenges of Practicum at College of Education: Supervisors & Students' Teachers Perspective*. International Journal of Novel Research in Humanity and Social Sciences Vol. 3(3), pp: (45-52).

Emilia, E. & Amalia, L.L. (2014, May). The Exploration of Pre-Service EFL Teachers' Challenges in Field Practicum. International Journal of Education, Vol.7(2).

Rahayuningsih, D. (2016). *Student Teachers' Challenges in Developing Teaching Materials During Teaching Practicum in Vocational School*. Journal of English and Education, 4(2), 24-34.

Petra, M.M., Tripepi, S., & Guardiola, L. (2020, May). *The Effects of Changes in Field Practicum Hours on Student Preparedness for Social Work*. How Many Hours is Enough. Field educator. School of Social Work, SimmonsVol, 10(1).

Itmeizeh, M. & Jaradat, W. (2020). *Problems Facing EFL Students in Practicum Courses at Palestinian Universities.* Multicultural Education Vol, 6(1). DOI: 10.5281/zenodo.3785175.

Sarocoban, A. (2010). Problems encountered by student-teachers during their practicum studies. Procedia Social and Behavioural Sciences 2. Ankara, Turkey.